# செந்தமிழ்

தொகுதி : 93 நவம்பர் 1999 பகுதி : 11

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம் • THE MADURAI TAMIL SANGAM •

மதிப்புறு ஆசிரியர் **மா.தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் **நா.பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்.டி.,

## தமிழ்ச்சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| திரு.நா.குமரன் சேதுபதி. | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. மா.தனுக்கோடிபாண்டியன் | செயலாளர் |
| திரு. மா.சங்கரபாண்டியன் | உறுப்பினர் |
| திரு. கே.எஸ்.டி.இராசேந்திரன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். என்.சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ.பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. அ.சாமிஐயா | உறுப்பினர் |
| திரு. வே.திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.அழகுமலை | உறுப்பினர் |
| திரு. க.சி.அகமுடைய நம்பி | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம் | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| பேரறிஞர் | தமிழண்ணல் | மதுரை |
| பேரறிஞர் | செ.கந்தசாமி | முதல்வர் |
| டாக்டர் | என்.சேதுராமன் | மதுரை |
| பேரறிஞர் | ம.ரா.போ.குருசாமி | கோயம்புத்தூர் |
| பேரறிஞர் | ச.மெய்யப்பன் | சிதம்பரம் |
| பேரறிஞர் | சி.கதிர் மகாதேவன் | மதுரை |
| பேரறிஞர் | கு.துரைராசு | எட்டையபுரம் |
| பேரறிஞர் | அ.அ.மணவாளன் | சென்னை |
| பெரும்புலவர் | இரா.இளங்குமரன் | அல்லூர். திருச்சி |
| பேரறிஞர் | அ.தட்சிணாமூர்த்தி | தஞ்சாவூர் |
| பேரறிஞர் | எஸ்.எம்.கமால் | இராமநாதபுரம் |
| பேரறிஞர் | ஈ.கே.இராமசாமி | மதுரை |
| பேரறிஞர் | சே.அரிராமநாதன் | மதுரை |
| பேரறிஞர் | அ.மா.பரிமணம் | தஞ்சாவூர் |

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ.. 60 | |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 1000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


மதிப்புறு ஆசிரியர் **மா.தனுக்கோடி பாண்டியன்** பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

ஆசிரியர் பேரறிஞர் **நா.பாலுசாமி**
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., எம்.எட்., பி.எச்.டி.,

# பொருளடக்கம்


1. எல்லோர்க்கும் தொல்காப்பியம் — 381
   பேரறிஞர் நா. பாலுசாமி

2. காவிரி-சங்க காலப் பதிவுகள் — 384
   பேரறிஞர் தெ. திருஞானமூர்த்தி

3. திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம் — 392
   ஆய்வாளர் மொ. மருதமுத்து

4. பழந்தமிழ்ப்பெயர்கள்(மதுரை மாவட்டம்) ஓர்ஆய்வு — 400
   அறிஞர் க.மா. வீரணன்

5. பட்டினப்பாலை காட்டும் சமுதாய வாழ்வியல் — 409
   ஆய்வாளர் மு. தமிழ்க்கொடி

- பேராசிரியர் நா.பாலுசாமி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

**சூத்திரம் 405**

*(நிரல்நிறை)*

**அவற்றுள்**
**நிரல்நிறை தானே**
**வினையினும் பெயரினும் நினையத் தோன்றி**
**சொல்வேறு நிலைஇப் பொருள்வேறு நிலையல்.**

(பொ.ரை) மேற்சொன்ன நான்கனுள் நிரல்நிறை என்பது, ஆராயும் போது வினையாகவும் பெயராகவும் தோன்றிச் சொல் வேறாக நிற்கப் பொருள்வேறுபட நிற்றலாம். பொருள் என்பது முடித்துக்காட்டும் சொல்.

**(எ.டு.)**

(அ) 'மாசு போகவும் காய்பசி நீங்கவும், கடிபுனல் மூழ்கி அடிகில் கை தொட்டு' - இத்தொடரில் முடிவனவும் முடிப்பனவும் ஆகிய வினைச் சொற்கள் வேறு வேறாக நிற்பதால், இது **வினை நிரல்நிறை** ஆயிற்று. இத்தொடரில் உள்ள சொற்கள் மாசுபோகப் புனல் மூழ்கி, பசி நீங்க அடிசில் கைதொட்டு என நிரலே அமையும்.

(ஆ) 'கொடி குவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி - இத்தொடரில் முடிவனவும் முடிப்பனவும் ஆகிய பெயர்ச்சொற்கள் வேறு வேறு நிற்பதால், இது **பெயர்**

நிரல்நிறை ஆயிற்று. இவை நுசுப்பு கொடி, உண்கண் குவளை, மேனி கொட்டை என இயையும்.

போக நீங்க என்னும் வினையெச்சங்கள் முடிவன; மூழ்கி, தொட்டு என்னும் வினையெச்சங்கள் முடிப்பன.

நுசுப்பு, உண்கண், மேனி முடிவன; கொடி, குவளை, கொட்டை என்பன முடிப்பன என அறிக. (கொட்டை - தளிர்)

## சூத்திரம் 406

### (சுண்ணம்)

**சுண்ணம் தானே**
**பட்டாங்கு அமைந்த ஈரடி எண்சீர்**
**ஒட்டுவழி அறிந்து துணித்தனர் இயற்றல்**

(பொ.ரை). சுண்ணம் என்பது இயல்பாக அமைந்த அளவடி இரண்டில் உள்ள எட்டுச் சீர்களைப் பிரித்துப் பொருந்தும் இடம் அறிந்து பொருத்திக் கூட்டி இயற்றப்படுவதாகும்.

சுண்ணம் அளவடி இரண்டில் அல்லது பிற அடிகளில் வாராது.

(எ.டு.) 'சுரைஆழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்குநிலை என்ப
கானக நாடன் சுனை.' - இதில் முன் இரண்டு அளவடிகளில் எட்டுச்சீர்கள் உள்ளன. ஆனால் அவற்றைப் பாட்டின் போக்கில் வைத்துப் பொருள்கொண்டால் கேலிக்குரியதாகும். எனவே அவற்றை முறையே, சுரை மிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை, முயலுக்கு நீத்து

என்று பிரித்துக் கூட்டப் பொருள் இயையுமாறு காண்க. சுண்ணம்போலச் சிதறிப் பரந்து கிடத்தலின் இது சுண்ணம் எனப்பட்டது.

## சூத்திரம் 407

### (அடிமறி)

**அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து**
**சீர்நிலை திரியாது தடுமா றும்மே**

(பொ.ரை.) அடிமறிச் செய்யுள் என்பது, அடிதோறும் சீர்கள் நிற்கும் நிலையில் மாறாமல் நிற்ப, அடிகள் தத்தம் நிலையில் மாறுபட்டு, ஒன்றுள்ள இடத்தில் மற்றொன்று வந்து நிற்கும்; ஆயினும் பொருள் மாறுபடாது. (செய்தி-செய்யுள்)

(எ-டு.) "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
இல்லறம் அல்லது நல்லறம் அன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்"

-இந்நான்கடிகளுள் எந்த ஒரு அடியையாவது மாற்றி முன் பின்னாக வைத்தாலும் பொருள் மாறுபடாது. இது பெரும்பாலும் நாலடிச் செய்யுளில்தான் வரும்.

(தொடரும்)

# காவிரி - சங்க காலப் பதிவுகள்

*-பேரறிஞர். தெ.திருஞானமூர்த்தி*

காட்டுவாசிகளை மனிதர்களாக்கிய பெருமை நதிகளுக்கே உரியதாகும். உலகப் பேராறுகளுள் குறிப்பிடத்தக்க ஒன்றாகத் திகழ்வது காவிரி. இந்திய ஆறுகளுள் காவிரியை ஒத்த சிறப்புக்குரியது கங்கையென இலக்கியங்கள் பேசுகின்றன. தொன்மை மிக்க தமிழினத்தின் ஊற்றுக் கண்ணாகவும் உயிராகவும் விளங்குவது காவிரியாகும். காவிரி பற்றிய குறிப்புகள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய நம் இலக்கியங்களிலும் மிகுந்து காணப்பெறுகின்றன. அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பொருநராற்றுப்படை, பட்டினப்பாலை, மலைபடுகடாம், சிலப்பதிகாரம் ஆகிய நூல்களில் காவிரி பற்றிய பதிவுகள் வெளிப்படையாக இடம் பெற்றுள்ளன.

காவிரி தோன்றும் இடத்தைக் 'குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி' (527) என்று மலைபடுகடாமும், 'குடமலைப் பிறந்த கொழும்பஃறாரமொடு' (10:106) என்று சிலப்பதிகாரமும் குறிப்பிடுகின்றன.

"ஆற்றோரம் தேக்குமரம் அலைமோதும் காவேரி
பார்த்திருக்க நெல்விளையும் பஞ்சந்தீர்க்கும் சோழநாடு
கட்டுக்கலங்காணும் கதிர்வுழக்கு நெற்காணும்
சொன்ன பொதிகாணும் சோழராசா சீமையிலே".

என நாட்டுப்புறப்பாடல் ஒன்று சோழநாட்டையும் சோழராசாவையும் முன்னிறுத்திப் பேசுகின்றது. ஆனால், பழம் இலக்கியங்கள் காவிரி நாடு, காவிரி நாடன் என்று ஆற்றை முன்னிலைப் படுத்தியே பேசுகின்றன. காவிரி பாய்ந்து வளம் பரப்பிய பகுதிகளைக் 'காவிரி புரக்கும் நன்னாட்டுப் பொருந" (புறம் 393:23) என்று நல்லி றையனாரும், 'தாங்கா விளையுள் காவிரி நாடுங் காட்டி' (சிலம்பு 6:31) என்று இளங்கோவடிகளும் குறிப்பிடுகின்றனர். சோழநாடு என்று சுட்டாமல் காவிரி நாடு எனப் புலவர்கள் சுட்டியிருப்பது

அதன் இன்றியமையாமையைப் புலப்படுத்தும்.

நாட்டுப் பெயர் நதியை ஒட்டி அமைந்தது போல மன்னனும் நதியின் பெயராலேயே குறிக்கப் பெற்றுள்ளான். 'நீயே தண் புனற் காவிரிக் கிழவனை' (58:1), காவிரிக் கிழவன் (399:12) என்று புறப்புலவர்களும், 'வேலி ஆயிரம் விளையாட்டு ஆக காவிரி புரக்கும் நாடு கிழவோன்' (246-248) என முடத்தாமக் கண்ணியாரும், காவிரி நாடன் (1:5), 'காவிரி நாடனைப் பாடுதும் பாடுதும் (29:16) என்று இளங்கோவடிகளும் குறிப்பிடுகின்றனர். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய களவழி நாற்பதில் காவிரி நாடன் என்ற சொல்லாட்சி (7,12,24,35,36) ஐந்து இடங்களில் இடம் பெற்றுள்ளது.

காவிரி வளத்தால் பயனால் தோன்றிய நகரை 'காவிரிப் படப்பை நன்னாடு (9:47) என்று பதிற்றுப்பத்தும், காவிரிப் படப்பைப் பட்டினம் (15:151) என்று சிலம்பும் குறிப்பிடுகின்றன. காவிரிப்படப்பைப் பட்டினமான காவிரிப் பூம்பட்டினம் சிறந்த துறைமுகமாய் விளங்கிய செய்தியைப் பட்டினப்பாலை பேசுகிறது.

"வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்" (187-191)

காவிரித் துறைமுகத்தில் மயங்கிக் கிடந்தன என்கிறார் கடியலூர் உருத்திரங் கண்ணனார்.

தென்மேற்காக ஓடும் காவிரியின் போக்கு மேட்டூரில் முடிவடைந்து பின்னர் தென்கிழக்காக ஓடி வருகின்றது. அணையை உடைத்துக் கிழக்கு நோக்கிப் பாயும் காவிரியின் போக்கைச் சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

"சிறை பறைந்து உரைஇச் **செங்குணக்கு ஒழுகும்**
அம்தண் காவிரி போல" (76)

என்று அகநானூறும்,

**'செங்குணக்கு ஒழுகும்** கலுழி மலிர்நிறைக் காவிரி' (5:5-6) எனப் பதிற்றுப்பத்தும் குறிப்பிடுகின்றன.

ஆழங்காண முடியாத காவிரியின் வெள்ளப் பெருக்கைப் பல புலவர்கள் சுட்டியுள்ளனர். ஓடக்கோல் நிலைபெறாத காவிரியின் புதுவெள்ளம் (அகம் 6:6) என்றும், 'கழை யளந்து அறியாக் காவிரிப் படப்பை' (அகம்.326:10) என்றும் பரணர் குறிப்பிடுகின்றார்.

"நாடுஆர் காவிரி கோடுதோய் மலிர்நிறைக்
கழைஅழி நீத்தம்" (அகம்.34:4-5)

என இருகரைகளின் உயரங்களையும் வெள்ளப் பெருக்குத் தொட்டுச் சென்றதை ஆலூர் மூலங்கிழாரும் குறிப்பிடுகின்றார். மக்கள் அரசிழந்து அல்லலுற்ற காலையும் கரை ததும்ப வந்து வளம் கொழிக்கச் செய்தது காவிரி என நன்றியோடு நினைவு கூர்கிறார் மாறோக்கத்து நப்பசலையார். இதனை,

"அரசிழந்து இருந்த அல்லற் காலை
... ... கரை பொருது
இரங்குபுனல் நெரிதரு மிகுபெருங் காவிரி" (புறம் 174: 6-8)

என்பதால் அறியலாம். 'மல்கிக் கரைகொன்று இழிதரூஉம் காவிரி' (35) எனக் களவழி நாற்பதும் இதனைக் குறிப்பிடுகின்றது.

காவிரித்துறையில் ஓடம்போகிய செய்திகளை,

"கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாற்று
அறல்வார் நெடுங்கலத்து அருநிலை கலங்க
மால்இருள் நடுநாள் போகித் தன்ஐயர்
காலை தந்த கணைக்கோட்டு வாளை" (126:5-8)

என அகநானூறும், 'காவிரிப் பேர்யாற்று நீரணி மாடத்து நெடுந்துறை போகி' (10:214-215) எனச் சிலப்பதிகாரமும் சுட்டுகின்றன. 'காவிரியில் வாளை மீன் பிடித்த செய்தியை அகம் 126 குறிப்பிட, 'செங்கண் வரிவரால் மீன் பிறழுங் காவிரி' (7) எனக் களவழி நாற்பது குறிப்பிடுகின்றது. பூக்கள் மலிந்துவரும் காவிரி நீர் பற்றி, 'பூவிரி புதுநீர்க் காவிரி' (116:28) எனப் புறநானூறும் 'மாஅ காவிரி மணம் தூஎக்கர்' (116-117) எனப் பட்டினப்பாலையும்,

"கழைமாய் காவிரி கடன்மண்டு பெருந்துறை
யிறவொடு வந்து கோதையொடு பெயரும்
பெருங்கட லோதம் போல" (123)

என அகநானூறும் பேசுகின்றன.

மருதமரங்களுடன் வஞ்சி மரங்களையும் சாய்த்து விடியலில் பெருவெள்ளத்துடன் வந்த காவிரி (226) என அகநானூறும்,

"உழவர் ஓதை; மதகு ஓதை
உடைநீர் ஓதை, தண்பதங் கொள்
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப
நடந்தாய் வாழி காவேரி" (7:4)

எனக் காவிரி செல்லும் அழகைச் சிலம்பும் பேசுகின்றன. காவிரிப் பெருவெள்ளம் கடலோடு கலக்குமிடத்தும் ஆற்றலொடு பாய்ந்ததைச் சங்க இலக்கியங்கள் பலவும் பரக்கப் பேசுகின்றன. கடற்கரையைக் குத்தியிடிக்கும் நீர்ப் பெருக்கையுடைய காவிரி (126) என அகநானூறும், 'கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்பச்' (528) சென்ற காவிரி என மலைபடுகடாமும், 'கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாற்று இடம் கெட' (6:163-164) எனச் சிலம்பும் பேசுகின்றன.

நன்செய் மட்டுமன்று தமிழகத் தோட்டங்களும் காவிரி நீர் பாயும் தாழ்நிலப் பகுதி என்பதை, காவிரி அணையும் தாழ்நீர்ப் படப்பை (385:8) எனப் புறநானூறு குறிப்பிடுகின்றது.

"புனிறு தீர் குழவிக்கு இலிற்றுமுலை போலச்
சுரந்த காவிரி" (68: 8-9)

என்ற புறநானூற்றுத் தொடர் காவிரிபால் தமிழ் நாட்டினர்க்கு உள்ள இயற்கை உரிமையைத் தெளிவுபடுத்தும். தமிழ்நாட்டின் ஆயிரத்தெட்டு அரசுகளின் வளத்திற்கு அடிப்படையாய் அமைந்தது காவிரி என்பதை,

'மாஇரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்
ஆயிரத்து ஓர்எட்டு அரசுதலைக் கொண்ட
தண்நறுங் காவிரி" (5:163-165)

என இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

காவிரியைச் சுட்டி இடத்தைத் தெளிவு படுத்தும் வழக்கு சங்ககாலத்தில் இருந்துள்ளது. காவிரியாற்றுக்கு வடக்கில் உள்ள குளத்து மாமரத் தளிர்போன்ற மேனியுடைய தலைவி (177) என அகநானூறும், 'காவிரி கடலொடு கலக்கும் துறைக்கு அருகில் சோமகுண்டம், சூரியகுண்டம் என்ற இரண்டு பொய்கைகளும் உள்ளன (9:57-59) எனச் சிலம்பும் பேசுகின்றன.

சங்ககாலத்தில் ஆண்களும் பெண்களும் புனலாடி மகிழ்ந்தனர். களவுக் காலத்தில் தலைவியோடும் கற்புக் காலத்தில் பரத்தையரோடும் தலைவன் புனலாடியமையைச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. புனல் விளையாட்டு என்பது சங்கத் தமிழர்தம் இன்ப வாழ்வின் ஒரு பகுதி என்பதை இலக்கியங்கள் உணர்த்தி நிற்கின்றன. காவிரியின் புதுவெள்ளத்தில் பரத்தையோடு புனலாடி மகிழ்ந்தாய் எனத் (அகம்.6) தலைவனோடு தலைவி ஊடல் கொள்கின்றாள். காவிரிப் பேர்யாற்று நெடுஞ்சுழியில் மூழ்கி மூழ்கிக் குளிப்பவள் போல ஊராரின் அலர் துன்பம் நீங்க மீண்டும் மீண்டும் தலைவனைக் கூடி இன்புற்றாள் என அகம் 62ஆம் பாடல் தெரிவிக்கின்றது.

காவிரியில் பலரும் புனலாடி மகிழ்ந்ததை, 'காவிரிப் பலர்ஆடு பெருந்துறை' (258) எனக் குறுந்தொகை சுட்டுகின்றது. காவிரித்துறையில் பலரும் நீராடுதலைப் போலத் தலைவன் மார்பு பரத்தையர் பலர்க்கும் உரியது என்னும் இறைச்சிப் பொருள் தோன்ற, 'காவிரி மலிர் நிறை அன்ன நின் மார்பு' (42) எனப் பேசுகின்றாள் ஐங்குறுநூற்றுத் தலைவி.

இயற்கை திரிந்தாலும் தான் திரியாது வந்து வளமூட்டும் சிறப்பை உடையது காவிரி. (35: 6-8) எனப் புறநானூறும், ஞாயிற்றின் வெப்பத்தால் இயற்கை தீய்ந்து போனாலும் பெரிய மலைகளில் அருவிகள் வற்றினாலும் மேகங்கள் மழை பெய்யாவிட்டாலும் துறைதோறும் நரந்தம் புல்லும் அகிலும் சந்தனமும் விடுத்து இயல்பாய்ப் பாய்ந்து செல்லும் சிறப்பினை உடையது காவிரி (222-239) என்று பொருநராற்றுப்படையும்,

"வசைஇல் புகழ் வயங்கு வெண்மீன்
திசை திரிந்து தெற்கு ஏகினும்
தற் பாடிய தனி உணவின்
புள் தேம்பப் புயல் மாறி
வான் பொய்ப்பினும் தான் பொய்யா
மலைத் தலைய கடற் காவிரி" (1-6)

எனப் பட்டினப்பாலையும் பேசுகின்றன. காவிரிப் பெருவெள்ளம் இயற்கை திரிந்த காலங்களிலும் கடலை அடையும் வரை குறையாத நீர்ப்பெருக்கை உடையது என்பதை.

"கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்
விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
.................. ........................
கடல்வான் எதிரக் கயவாய் நெரிக்கும்
காவிரிப் புதுநீர்க் கடுவரல் வாய்த்தலை" (10: 102-108)

எனச் சிலப்பதிகாரம் குறிப்பிடுகின்றது. காவிரி இடையே அணைகள் பல கட்டப் பெற்றதனால் அதன் மெய்ம்மையான பெருவெள்ளம் இன்று குறைந்துள்ளது. வறட்சி மிகுந்த இன்றைய சூழலில் இவை சங்கப் புலவர்களின் சிறப்பான இலக்கியக் கற்பனைகளோ என இத்தலைமுறை ஐயம் கொள்ளும் அவலம் நேர்ந்துள்ளது.

ஆட்டன் அத்தியைக் காவிரி ஆறு கொண்ட வரலாற்றுச் செய்தியைப் பல அகப்பாடல்கள் விளக்குகின்றன. ஆட்டன் அத்தியின் அழகை நயந்து கவர்ந்தாள் காவிரி. அதனால் மதி மருண்டு தன் காதலனைத் திசையெல்லாம் தேடினாள் ஆதிமந்தி (222) எனவும்,

"புனல் நயந்து ஆடும் அத்தி அணி நயந்து
காவிரி கொண்டு ஒளித்தாங்கு" (376)

எனவும் அகநானூறு பேசுகின்றது.

பெருகிவரும் காவிரி மணலினும் நின் வாழ்நாள் பலவாகப் பெருகுக (புறம்: 43) என வாழ்த்தினும்,

"இலங்குநீர்க் காவிரி இழிபுனல் வரித்த

அறல்என நெறிந்த கூந்தல்" (அகம். 213)

எனக் காவிரியிற் படிந்த கருமணல் தலைவியின் கூந்தலுக்கு உவமையாகவும் இடம் பெற்றுள்ளன. செல்வப் பெருக்கைச் சுட்டவும் காவிரியையே குறிப்பிட்டனர் சங்கப் புலவர்கள்.

"காவிரி மண்டிய சேய்விரி வனப்பின்

புகாஅர்ச் செல்வ" (8:12-13)

எனப் பெருஞ்சேரலின் சிறப்பை எட்டாம்பத்து பேசுகின்றது.

"காவிரிப்படப்பை நன்னாடு அன்ன

வளங்கெழு குடைச்சூல் அடங்கிய கொள்கை" (9:47-48)

எனச் சேரன் மாதேவியின் செறிவும் நிறைவும் விளக்கப்பட்டுள்ளன.

காவிரி வளத்தால் அந்நாட்டினர் பண்பாட்டின் உயர்நிலையை அடைந்தனர். அதனால் உலகினர்க்கு அவர்களே முன்மாதிரிகளாக விளங்கினர்.

"காவிரிப் படப்பை உறந்தை அன்ன

பொன்னுடை நெடு நகர்" (அகம். 385 : 4-5)

மணவிழாப் போல மணம் முடித்துக் கொள்ளாது தன் மகள் உடன் போக்குப் போயினாள் என வருந்துகிறாள் ஒரு செவிலி. காவிரியைத் தெய்வக்காவிரி என்றும் தீதுதீர் சிறப்புக்குரிய காவிரி (10:8) என்றும் காவிரியின் நீரைப் புண்ணிய நன்னீர் (5:166) என்றும் இளங்கோவடிகள் குறிப்பிடுவன தமிழர்தம் நம்பிக்கை மொழிகள் ஆகும்.

தமிழ்நாட்டு மகளிர் பண்பை, காவிரிப் பண்பாய் இளங்கோவடிகள் கானல்வரியில் சித்திரிக்கின்றார். நின் தலைவனாகிய சோழன் கங்கை தன்னைப் புணர்ந்தாலும், கன்னி தன்னைப் புணர்ந்தாலும் நீ ஊடல் கொள்வதில்லை. இதற்குக் காரணம் நின் பெருங்கற்பு என அறிந்தேன் (7 : 1-2) என்கிறார். காவிரியோடு கங்கையும் பல இடங்களில் இணைத்தே பேசப்பெற்று வந்துள்ளது என்பதை அடிகளின் கூற்றும் மெய்ம்மைப் படுத்துகின்றது. தமிழ்நாட்டின் தாயாகவும், தலைவியாகவும்,

தெய்வமாகவும் விளங்குகின்ற காவிரி தமிழர்தம் வாழ்க்கை, இன்ப துன்பம், பிறப்பு இறப்பு, யாவற்றோடும் தொடர்புபட்டிருக்கும் நிலையைச் சங்க இலக்கியங்கள் சிறக்கப் பேசுகின்றன. இத் தொடர்புகள் இன்றும் ஆழக்கால் கொண்டுள்ளன என்பதனையே இன்றைய நடப்புகளும் உணர்த்தி நிற்கின்றன.

காவிரி தோன்றும் குடகு மலையையும் கிழக்காகப் பாய்ந்துவரும் அதன் போக்கையும் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன.

காவிரி நாடு, காவிரி நாடன், காவிரி நகர், காவிரிப் பட்டினம் என்ற வழக்குகளே சங்ககாலத்தில் சிறப்புற்றிருந்தமையை அறிய முடிகின்றன.

காவிரியின் ஆழங்காணா நிலையும் கடற்கரை வரை செல்லும் அதன் பெருவெள்ளமும், இயற்கை திரிந்த காலங்களிலும் தான் திரியாத அதன் சிறப்பும் புலவர்களால் சிறக்கப் பேசப்பெற்றுள்ளன.

தமிழர்தம் அகவாழ்விலும் புற வாழ்விலும் காவிரி உவமைகளாகவும், வாழ்த்தாகவும் இடம்பெற்ற நிலை விளக்கப் பெற்றது.

செல்வ நிலையைச் சுட்டவும் வளமான பண்பாட்டைக் கொண்டது என்பதை உணர்த்தவும் காவிரி நாடே இலக்கியங்களில் எடுத்தாளப் பெற்றுள்ளன.

காவிரியில் ஆண்களும் பெண்களும் புனல் விளையாட்டாடியதை இலக்கியங்கள் தெளிவு படுத்துகின்றன.

தெய்வக் காவிரி அதன் நீர் புண்ணிய நீர், தீதுதீர் நீர் என்ற தமிழர்தம் நம்பிக்கைகள் புலப்படுத்தப்பட்டன.

# திங்களூர்
# அருள்மலை நொண்டி நாடகம்

-ஆய்வாளர் மொ.மருதமுத்து

**முகப்புரை:**

அறிந்த கருத்துக்களையும், உணர்ந்த உணர்ச்சிகளையும் அளந்து உரைப்பதற்குப் பயன்படும் கருவியே மொழியாகும். அம்மொழிபேசும் மக்களின் முடிந்த கொள்கைகளையும், முதிர்ந்த குறிக்கோள்களையும் தன்னகத்தே கொண்டு திகழும் இயல்புடையதுதான் இலக்கியம். இலக்கியவளம் இல்லாத மொழி மணம் வீசாத மலருக்கு ஒப்பானதாகும். தமிழ்மொழியில் சங்க காலத்திலிருந்து இன்றைய காலம்வரை பலவகையான இலக்கியங்கள் எழுந்துள்ளன. அதிலும் குறிப்பாக 17,18ஆம் நூற்றாண்டுகளில் அம்மானை, குறவஞ்சி, பள்ளு, நொண்டிநாடகம் முதலான பலவகைப் புதுச்சிற்றிலக்கிய வகைகள் தோன்றித் தமிழ்மொழியை வளப்படுத்தின. அவ்வகையில் 'திங்களூர் அருள்மலை நொண்டிநாடகம்' என்ற நூலும் ஒன்றாகும். இந்நூல் சுவடிநிலையிலிருந்து அண்மையில் சென்னை ஆசியவியல் நிறுவனத்தின்வழி இக்கட்டுரையாசிரியரால் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

**திங்களூர் அருள்மலை நொண்டி நாடகம்**

நொண்டி நாடக அமைப்பில் எழுந்த நூல்களுள் திங்களூர் அருள்மலை நொண்டி நாடகமும் ஒன்றாகும். இந்நூல் திங்களூருக்கருகிலுள்ள அருள்மலையில் வீற்றிருக்கும் முருகபெருமானைப் பாட்டுடைத் தலைவராகக்கொண்டு பாடப்பெற்றுள்ளது. இந்நூல் இப்பெயர் மட்டுமன்றி அருள்மலை நொண்டி நாடகம் எனவும், திங்களூர் நொண்டி நாடகம் எனவும் வழங்கப்பெறும் என்பதனை வேறுபிற சுவடிகள்[1] நமக்குத்

---

1. அ) நாமக்கல், தமிழாசிரியர், புலவர் தே.ப. சின்னசாமி அவர்களின் ஓலைச்சுவடி.

ஆ) தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடி எண்.3577.

தெரிவிக்கின்றன. இவ்வூர் ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூர் விசயமங்கலத்திலிருந்து கோபிச்செட்டிப்பாளையம் செல்லும் பாதையில் இருக்கின்றது. திங்களூருக்கு நேர்மேற்கே 6 கி.மீ. தொலைவில் தோரணவாவி எனும் ஊருக்கருகில் அருள்மலை உள்ளது.

**நூலாசிரியர்**

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்தின் ஆசிரியர் திரு. கு.அவிநாசிப் புலவர் அவர்கள். இதனை இந்நூலின் அகச்சான்றின்வழி அறியலாம். இவர் செங்குந்தர் குலத்தைச் சேர்ந்தவர்; தந்தையார் பெயர் குள்ளையன் என்றும், மாமன் முத்துராமய்யன் என்றும் இந்நூலின் பாடல்கள் குறிப்பிடுகின்றன. அப்பாடல்கள்:

"செங்குந்தர் குலத்தில் அவிநாசி - சொன்ன
  செந்தமிழைப் பாடியாடச் சந்தனமும்பூசி" (பாடல். 8:10)

"................ .................... ..................... செங்குந்தர்
குலக்கொழுந் தான குள்ளையன் தனயன்
இலக்கணத் தொகையான் இனிய அவிநாசி
நாவலன் ஆனவன் நன்னூல் தெரிந்து
................ .................... ..................... .....................
................ .................... ..................... .....................
நற்றமி ழாலே நாதன் அருள்மலை
  கொற்றவன் மீதில் கூறிய நொண்டியை" (பாடல் 38:158-176)

"வாத்தியன் வைத்தியன் அவிநாசி - வாணன்
  மாமனாக வந்தமுத்து ராமய்ய வசீகரன்" (பாடல் 39:12)

எனவரும் பாடலடிகளால் மேற்கண்ட செய்திகள் விளங்கும். மேலும் இவர் பன்னிரு பாட்டியல், சிதம்பரப் பாட்டியல் முதலான பாட்டியல் நூல்களையும், ஐம்பெருங் காப்பியங்களையும் படித்து நாவலராகவும் விளங்கியமையை,

"பன்னியல் பொருத்தம் பாட்டியல் கற்றவன்
பன்னுல் சிதம்பரப் பாட்டியல் தெரிந்தவன்
பஞ்சகா வியங்கள் படித்த நாவலன்" (பாடல் 38:171-173)

எனும் பாடலடிகளால் அறியலாம்.

இந்நூலாசிரியரின் ஊர்ப்பெயரினை அறியமுடியவில்லை. திங்களூரின் செழிப்பையும், அவ்வூர்ப் பெருமக்களையும் பலவகையில் சிறப்பித்துப் பாடுவதிலிருந்து இவர் அவ்வூரைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும் என்று கருத இடமுளது. இவரைப்பற்றி மேலும் அறிந்துகொள்ள இந்நூலையன்றி வேறு கருவிகள் (source) எவையும் கிடைக்கவில்லை.

**காலம்**

பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கும் இறுதிப் பகுதிக்குமிடையில் இந்நூலாசிரியர் வாழ்ந்திருக்க வேண்டும். இதனை இந்நூலில் இடம்பெறும் பல்வேறு செய்திகளின்மூலம் அறியமுடிகின்றது. இவர் இந்நூலில் வரலாற்றுப் பாத்திரங்களின் பெயர்களாக உசேன்கான்சாகிப், ஆண்டமுத்துராயன், கிருஷ்ணதாசு, காளிமன்னன் ஆகியோரைக் குறிப்பிடுகின்றார்.

மைசூர் ஹைதர்அலி பாச்சா, திப்புசுல்தான் இவர்களின் நண்பனும் கோயமுத்தூர் பகுதியின் படைத்தலைவனுமான உசேன்கான்சாகிபைப் பற்றி இந்நூலாசிரியர் நொண்டியின் கூற்றாக,

"அதிவீர பராக்கிரம சூரன்-நல்ல
அசரத்துக் கானுசாயபு உசேனுமகராசன்" (பாடல் 34:21)

"மட்டில்லாப் படைக்குச் சருதானி-யார்க்கும்
வல்லவன் உசேனுகானு நல்லமகராசன்" (பாடல்.34:23)

"தாடாளன் உசேனுகானு சாயபு-வெகு
தன்னிமையாக நாலுநாள் அன்னமுந்தந்தாரே"

(பாடல் 34:24)

எனவரும் பாடலடிகளால் குறிக்கின்றார். இவ் உசேன்கான்சாகிப் கோயமுத்தூரை வென்று இவர்கள் இருவரின் பாராட்டைப் பெற்றுள்ளான். இச்செய்தியைக் கூறும் தனிப்பாடலான 'அவினாசியில் நாவறுத்து முத்தி பெற்ற விருத்தம்' என்னும் பாடல்,

சீர்ஒபற்ற கலியுக சகாத்தியம் நாலாயிரத்
திருநான்கு நூறுதனிலே

சேர்மிகுதி தொண்ணூற் றெட்டுமேல் பிங்கிளம
தென்னும் சம்வஸ்தரத்தில்
சிந்திக்கும் உயர்ஆனி மாசம்மூ வைந்துவில்
தியதிஆ தித்தவாரம்
செப்பரிய புனர்பூஷ நாளதனில் ஐந்து
சீர்கடிகை தனில்மேலே
பார்பெற்ற சீரங்கப் பட்டணச் சமஷ்த்தானம்
பாச்சாவு அவருடையநண்
பதுகொண்ட கோயமுத்தூர் வென்றகானுச் சாயபு
அவர்மெச்சும் அவினாசியில்
பண்புபெறு இபராமு சாயவு மெச்சும்
..................... நஞ்சயதுரை
பரிவுபெறு கிருஷ்ணய்யன் இனியம் செய்து
பாக்கியம் விளங்குநாளில் ......"[2]

என்று கூறுகிறது. இப்பாடலில் கலியுக ஆண்டு 4898, தமிழ் பிங்கள வருடம் ஆனிமாதம் 15ஆம்தேதி ஞாயிற்றுக்கிழமை புனர்பூசநாள் என்பது குறிக்கப்பட்டுள்ளது. இதற்குச் சரியான ஆங்கிலதேதி 25.6.1797 ஆகும். ஹைதர்அலி 7.12.1782இல் இயற்கை எய்தினார் என வரலாறு கூறுகிறது. எனவே ஹைதர்அலி, திப்புசுல்தான் இவர்களின் நண்பனான உசேன் கான்சாகிபை இந்நூலாசியர் குறிப்பிடுவதால் 18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதிக்கும் இறுதிப் பகுதிக்கும் இடையில் (கி.பி.1750-1800) இவர் வாழ்ந்தவர் என விளங்குகிறது.

**இந்நொண்டி நாடகத்தில் திங்களூர் அருள்மலை**

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகத்தில் திங்களூரானது, 'வரம்பெற்ற மாமுனிவர்ஓதும் திங்கள்மாநகர்' (பா.29), 'செந்திருமடந்தை யோதும் திங்கள்மாநகர்' (பா.31), 'தெள்ளு செந்தமிழோர் போற்றும் திங்கள்மாதர்' (பா.33), 'கொக்குமாதளைகள்

2. ஆசியவியல் நிறுவன ஓலைச்சுவடி, பல்வகைத் தனிப்பாடல்கள், சுவடி எண்.572

வாழை குலாவிய திங்களூர்' (பா.35), 'தண்டமிழ் விளங்குகின்ற சந்திரபுரம்' (பா.11) என்றும் பலவாறு குறிக்கப்படுகின்றது. இவ்வாறு குறிக்கப்பெறுவதிலிருந்து இவ்வூரின் பெருமையினையும் சிறப்பினையும் அறியமுடிகின்றது.

மேலும் இவ்வூர், அம்புலிநகர், இந்துமாநகர், இந்தூர், மதிநகர், சந்திரபுரம், சந்திரபுரி எனவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்நொண்டி நாடகத்தில் அருள்மலையானது, 'அமரர்பரவும் காட்சியணிந்த திங்களூர் அருள்மாமலை' (பா.1), 'அல்லிமலர்த் தாமரைத் தடாகஞ் சூழ்ந்த அருள்மலை' (பா.2), 'கன்னியர்சூழ் அருள்மலை' (பா.7), 'கவிஞோர் போற்றும் அருள்மலை' (பா.9), 'இலக்கணக் கவிஞோர் போற்றும் இறையவன் அருள்மாமேர்' (பா.17), 'திசைபுகழ் அருள்மாமேர்' (பா.27), என்றெல்லாம் சிறப்பிக்கப்படுகிறது.

இந்நூலாசிரியர், அருள்மலை முருகனைக் குறிப்பிடுமிடத்து, 'திங்களூரருள் மாமலையான்' (பா.1), 'திங்கள் மாநகரில் மேவும் சந்திரநாதர் பெற்ற சண்முகன்' (பா31), 'திங்களூர்வாழ் முக்கணன் அருள்மாமேரில் முருகர்' (பா.35) எனப் பலவாறு குறிப்பிடுகின்றார். திங்களூரைச் சுட்டுமிடத்து, 'மதிநகர் எய்தால் வல்வினை பயக்கும் அன்னகரதிலே அருள்மலைப் பெருமையை' (பா.38), 'இந்த லோகத்தில் இந்துமாநகரில் அந்தமாமலைபோல் அருள்மலையுளது' (பா.38:93) என்றும் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு இந்நூலாசிரியர் குறிப்பிடுவதிலிருந்து இவ்விரு ஊர்களும் அக்காலத்தில் 'திங்களூர் அருள்மலை' என ஒரே பெயரில் அழைக்கப்பெற்று வந்துள்ளமையை அறியமுடிகின்றது.

**திங்களூரின் சிறப்புகள்**

இந்நொண்டி நாடகநூலின் வழியாகத் திங்களூர் பற்றிய சிறப்புகள பல அறிய வருகின்றன. இவ்வூரில் அமைந்துள்ள சிறப்புமிக்க கோயில்களாகச் சந்திரநாதர் கோயில், நெட்டூரழகர் கோயில், கொண்டத்துக்காளியம்மன் கோயில், அப்பச்சிமார் மடக்கோயில், அருள்மலை ஆண்டவர் கோயில் ஆகிய கோயில்கள் குறிப்பிடப்பெற்றுள்ளன.

அருள்மலை முருகனை இந்நூலாசிரியர் மட்டுமன்றி, இவர் காலத்திற்குப் பின்வாழ்ந்த நஞ்சையப் புலவர் என்பவரும் போற்றிப் புகழ்ந்து பல தனிப் பாடல்களையும் அருள்மலை ஆண்டவர் பிள்ளைத்தமிழ் ஆகிய நூல்களையும் இயற்றியுள்ளார்.

**இந்நூலில் அறியவரும் பிறசெய்திகள்**

திங்களூர் அருள்மலை நொண்டி நாடகநூலிலுள்ள சில பாடலடிகளின் மூலம் கொங்குநாட்டின் அரசியல் சூழ்நிலைகளும், அந்நாட்டுச் சமூகத்தாரின் அறச்செயல்கள் மற்றும் பழக்கவழக்கங்களும் அறியப்படுகின்றன. இந்நொண்டி நாடக நூலினை இயற்றி நடிக்கக் கொடை தந்தவர்களின் பெயர்களாக ஆண்டமுத்துராயன், கிருஷ்ணதாசு, காளிமன்னன் ஆகியோரையும், செங்குந்தர் குலத்தைச் சேர்ந்தவர்களான அங்கணன், அம்மாசை அண்ணன், ஆறுமுகம், பொன்னுராயன், முத்துராமய்யன், வேலப்பன் ஆகியோரையும் இந்நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

இந்நூல் எழுந்த காலத்தில், அப்பச்சிமார் மடத்தின் தலைவராகவும், திங்களூரின் பட்டக்காரராகவும் இருந்தவர் ஆண்டமுத்தராயன் அவர்கள். இவர் வேட்டுவக் குடியில் கண்ணப்பர் வமிசத்தில் வந்த குருகுல மன்னர். இந்நூலிற்கு இவர் கொடைவழங்கிய சிறப்பினை,

"கொற்றவன் குருகுல வசீகரன் - நல்ல
 கோகனகம் போலேயுற்ற வாகைமாலை மார்பன்
பத்தியுள்ள சிவபூசை வேடன் - நல்ல
 பார்த்திபர்கள் மெய்க்கச்சிவ ராத்திரியுண்டு பண்ணினோன்
தின்றுருசி யானகறி தன்னை - சிவனே
 தின்னப்பா வெனக்கொடுத்த கண்ணப்ப வங்கிஷத்தான்
அன்றுலகில் புகழ்பெற்ற தூயன் - என்னை
 ஆண்டமுத்து ராயனவன் வேண்டியபொன் கொடுத்தான்"
(பா.39:2,3)

என இந்நூலாசிரியர் குறிப்பிடுகின்றார்.

திங்களூரில் வாழ்ந்த சத்திரிய நாவிதர் குலத் தலைவர்

கிருஷ்ணதாசு ஆவர். இவரின் தந்தை பெயர் ஆலமுசிங்கேந்திரன் என்பதைத் தனிப்பாடல் மூலம் அறிய முடிகின்றது. இவர் அகத்தியர், சடைமுனி நூல்களையும், தசநிகண்டு, காரிகை, திவாகரம் முதலிய பல்வேறு நூல்களையும் கற்று இலக்கணப் புலவராகவும், செல்வந்தராகவும் விளங்கியமையை இந்நொண்டி நாடகநூலும், தனிப்பாடலும்[3] தெரிவிக்கின்றன.

"................... ................... ................... நல்ல

வஸ்துவான் வயித்தியின் சத்திரிய குலதீரன்

சுத்திக்கும் வித்தியா பிரபலன் -ஆசுமதுரம்

சித்திரவித் தாரக்கவி முத்தமிழில் பேசும்

கொற்றவனாம் எங்கள்கிருஷ்ண தாசு-மன்னன்

கொடுத்தானே இருபத்தெட்டுத் தங்கக்காசு (பா.39: 4,5)

மேற்கண்ட பாடலின் வழி, இவர் 28 தங்கக்காசுகளை இந்நூலிற்குக் கொடையாக அளித்துள்ளதை அறியமுடிகின்றது.

கொங்குவேளாளரில் காரளர் குலத்தில் தோன்றிய வண்ணக்கர்குலப் பட்டிலிங்கக் கவுண்டரின் மகன் காளிமன்னன் ஆவர். இவர் திங்களூர்க்குத் தலைவராகவும், கவுரவமுள்ள செல்வந்தராகவும் விளங்கியவர். இவர் இந்நூலாசிரியர்க்கு ஒரு சாளிகை (பணப் பை) பொன், சிறு குதிரை ஆகியவற்றைத் தந்து உதவியுள்ளார்.

**நாடகமாக நடக்கப் பெற்றமை**

இந்நொண்டி நாடகநூலானது இலக்கியமாக மட்டுமன்றி, நாடகமாகவும் நடிக்கப்பெற்று வழங்கி வந்துள்ளமையை இந்நூலில் வரும் பாடலடிகளால் அறிய முடிகின்றது. இந்நூலின் நொண்டி,

"செங்குந்தர் குலத்தில்அவி நாசி -சொன்ன

செந்தமிழைப் பாடியாடச் சந்தனமும்பூசி" (பா.8:10)

என்றும்,

"நற்றமிழாலே நாதன் அருள்மலை

கொற்றவன் மீதில் கூறிய நொண்டியை

---

3. ஆசியவியல் நிறுவனச் சுவடி எண்.572

நாட்டியஞ் செய்தேன் நாடுகள் தோறும்

பாட்டியல் கேட்டு பரிசுதந் தாரே" (பா. 38 : 175-178)

என்றும் பாடியாடுவதிலிருந்து அறியலாம். கொங்குநாட்டில் பல ஊர்களிலும் இந்நாடகம் நடிக்கப்பெற்று, பாராட்டையும் பரிசையும் பெற்றுள்ளதை இதிலிருந்து அறியமுடிகிறது. இந்நூலாசிரியரே இந்நாடகத்தில் நொண்டி என்னும் பாத்திரத்தில் பாடி நடத்துப் பரிசு பெற்றுள்ளதாகவும் கருத இடமுளது. ஆசிரியர் வரலாற்றைத் தொடர்ந்து, இவ்விரண்டாவது பாடல் வருவதாலும், இந்நொண்டி நாடகத்தை இயற்றி நடிக்கக் கொடை கொடுத்தவர்கள் பற்றி இந்நூலாசிரியர் குறிப்பிடுவதாலும் இதனை அறியமுடிகின்றது.

"பாருலகில் ஆசுகவி நொண்டி - தன்னைப்

படித்துநடிக் கத்தியாகங் கொடுத்தாரைச் சொல்லுகிறேன்"

(பா.39:1)

இந்நூலில் வரும் வாழிப்பாடல்,

"பார்புகழ் நொண்டி நாடகந் தன்னைத்-தினம்

படித்துப்படித் துக்கொண்டு நடித்தார்கள் வாழி" (பா.39:22)

என்று அமைவதிலிருந்தும், இந்நூல் நாடகமாக நடிக்கப்பெற்று வந்துள்ளமையை அறியமுடிகிறது.

**முடிப்புரை**

தமிழிலக்கிய வரலாற்றில் இதுவரை சுமார் 44 நொண்டி நாடகங்கள் இருப்பதாகத் தெரியவருகின்றது. இவற்றில் சுமார் 16 நொண்டி நாடகங்கள் தான் இதுவரை அச்சாகி வந்துள்ளன. திங்களூர் அருள்மலை நொண்டிநாடகம் தற்போது அச்சாகி வெளிவந்துள்ளதின் மூலம் 18ஆம் நூற்றாண்டில் தமிழகம் குறிப்பாகக் கொங்குநாடு அப்போதிருந்த நிலையினை அறியமுடிகின்றது. பதிப்பில் வராத இதுபோன்ற பிற சுவடி இலக்கியங்களையும் அச்சேற்ற வேண்டும் என்ற ஆர்வத்தை இனிவரும் தமிழாய்வாளர்களுக்கு உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

# பழந்தமிழ்ப் பெயர்கள் (மதுரை மாவட்டம்) ஓர் ஆய்வு

-அறிஞர் க.மா.வீரணன்

மதுரை மாவட்டத்தின் புவியியல் அமைப்பு குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய மூன்று நிலங்களைத் தன்னகத்தே கொண்டதாகும். கம்பம் பள்ளத்தாக்கில் முல்லையாறு பாய்கிறது. கோடைக்கானல் மலைச்சாரலில் குறிஞ்சி ஆண்டவர் கோவில் உள்ளது. கேரள எல்லையில் மேல்மலைத் தொடரில் கண்ணகியின் கோவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உசிலையிலிருந்து வத்தலக்குண்டு செல்லும் சாலையில் (வெற்றிலைக்குண்டு) வையையாற்றின் குறுக்கே அன்று ஆங்கிலேயர் பாலம் கட்டினர். அதில் கண்ணகிபாலம் என எழுதப்பட்டிருந்தது. நாற்பது ஆண்டுகளுக்கு முன் நமது அரசு பாலத்தை இடித்து விரிவுபடுத்தியது. கண்ணகி பாலம் என்றெழுதுவதைத் தமிழக அரசு மறந்துவிட்டது. அதற்கு அருகிலுள்ள ஊர் கண்ணகிபட்டியாகும். இன்று இதை மக்கள் கண்ணாபட்டி என வழங்குகின்றனர்.

மேற்கே சின்னமனூர் உத்தமபாளையம் பகுதியில் ஒரு காலத்தில் சங்கப்புலவர் ஒருவர் இருந்தார். அவர் இயற்பெயர் தெரியவில்லை. இன்று அப்பகுதியில் வாழும் தமிழர்பலர் தாம் சங்கப்புலவர் மரபினர் எனக் கூறுகின்றனர். அவர்களில் பலர் தமிழாசிரியர்களாகவும் உள்ளனர். அவர்களின் இலக்கணப்புலமை வியக்கத்தக்கதாயுள்ளது. எனினும் அவ்வட்டார மக்கள் சங்கப்புலவர் மரபினர் என்பதைச் சங்குப்புலவர் மரபினர் என்றே வழங்குகின்றனர். அண்மையில் மதுரையில் சூலமான காந்தியத் தலைவர் அருணாசலம் இம் மரபில் தோன்றியவரேயாவர். இவர் ஆளுநர் பட்வாரி காலத்தில் மேலவை உறுப்பினர்.

கம்பத்துக்கு அருகில் கூடலூர் உள்ளது. சங்க நூல்களில் கூடலூர்கிழார் என்னும் பெயர் உள்ளது. தமிழகத்தின் பிறபகுதிகளில் கூடலூர் உள்ளதால் இதை உறுதிசெய்ய இயலவில்லை. எனினும்

கிழார் இவ்வூரினர் என்று உ.வே. சாமிநாதையர் உறுதி செய்கிறார்.

இனி மருத நிலத்தை நோக்கின் வையைக்கரையில் மதுரை அமைந்துள்ளது. மருத நிலத்தில் உள்ள ஒரு நகரம் எவ்வாறு மதுரையாகும்? மருதை என்பதே பழந்தமிழ் வழக்காகும். வடக்கே மதுரா இருப்பதுபோல் தெற்கிலும் ஒரு மதுரா இருக்க வேண்டும் என்றெண்ணிய அன்றைய ஒருமைப்பாட்டாளர்கள் இம்மாற்றத்தைச் செய்துள்ளனர். இஃது ஒரு சமய மாற்றத்தைப் போன்றதாகும்.

**மருதுபாண்டியர்**

மதுரைக் காஞ்சி பாடியவரே ஒரு மருதனாகத்தான் இருக்கிறார். நகரின் பெயர் மாற்றமே அன்னார் குறிக்கோளாயிருந்திருக்க வேண்டும். மேலும் இன்றுள்ள மதுரை சங்ககால மருதையன்று. அது திருப்பரங்குன்றுக்குக் கிழக்கே இருந்தது.

"மாடமலி மறுகின் கூடற்குடவயின்" (முருகு) என்ற நக்கீரரின் பாடல் அடியை நோக்குக. கூடல்நகர் இன்று மதுரையின் ஓர் ஒதுக்குப்புறப் பகுதி.

"மாதரை உசிலம்ப[redacted]
மலைக்கும் கீழே ஆண்டிபட்டி
தேவாரம் தேனிச்சந்தை
திகட்டாத மருதக் கோட்டை"

இது இலக்கணமறியாப் பாமரர் பாடிய நாட்டுப்புறப்பாட்டாகும். இதில் மதுரை மருதைக்கோட்டை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாட்டுப் பிறந்த காலத்தில் மருதையைச் சுற்றிக் கோட்டை இருந்திருக்க வேண்டும். சங்க காலத்தில் இல்லாத சென்னைக்குக் கிடைத்திருக்கும் பெயர் மாற்றம் மருதைக்குக் கிடைக்குமா? அல்லது வைகை அ[illegible]யை என மாறுமா? தற்கால மதுரையில் பிட்டுத் தோப்புச் சாலையும், அரசர் அடியும், கோச்சடையன் இரணதீரன் இறைப்பற்றும் அதன் விளைவாய் விராட்டிபத்து (பிராட்டிபற்று) அச்சம்பத்து (அச்சன்பற்று) போன்ற இறையிலி நிலங்கள் சூழ்ந்த இடங்களும் நிறைந்து புராணக் கோலம் பூண்டிருப்பதைத் தமிழறிஞர் ஏற்றுக் கொண்டுள்ளனர். அறி(ஞ)நன் ஞ-போலி நன்கு அறிவதென்பது முன்பின்னாக மாறி வந்துள்ளது.

"செருப்புகன்றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்"

நக்கீரர் காட்டும் இம்மருதை இன்று பழங்கதையாகிவிட்டது.

இனி மதுரைக்கு அருகில் உள்ள மாங்குடியும், கொடிமங்கலமும் சங்கச்சான்றோர் வாழ்ந்த தொல்பதிகளாகும். அவர்கள் முறையே மாங்குடி மருதனாரும் கொடிமங்கலத்து வாதூளி நற்சேந்தனாரும் ஆவர். மதுரையிலிருந்து அலங்காநல்லூர் செல்லும் சாலையில் உள்ளது பொதும்பு. இங்கு பொதும்பில் கிழாரும், பொதும்பில் கிழார் மகனாரும் வாழ்ந்துள்ளனர். மேலும் ஐயூர் முடவனார், ஐயூர் மூலங்கிழார் ஆகிய இருவரின் ஊர்ப்பெயர் ஏடெழுதினோரால் தவறாக எழுதப்பட்டுள்ளது. இது தே.கல்லுப்பட்டி ஒன்றியத்திலுள்ள வையூராகும். இங்கு பழந்தமிழ்ச் சித்தர்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் உள்ளன.

திருமங்கலத்திலிருந்து சோழவந்தான் செல்லும் சாலையில் செக்காணூரணிக்கு அருகில் சாலையில் மேற்குப் புறத்தில் உள்ளது கோக்குளம், இங்கு வாழ்ந்தவர் கோக்குள முற்றனார். இவ்வூர் இப்போது கொக்குளம் என வழங்குகிறது. மேற்சொன்ன சாலையின் கிழக்கே அமைந்துள்ளது கிள்ளிமங்கலம். இங்கு பிறந்தவரே கிள்ளிமங்கலங்கிழார். இவ்வூர் இப்போது கிண்ணிமங்கலம் என வழங்குகிறது.

சங்க நூல்களில் ஆறு பாடல்களைப் பேராலவாயர் என்பவர் பாடியுள்ளார். ஆலவாய் என்பது மதுரையையும், ஆலவாயர் என்பது சிவபெருமானையும் குறிக்கும். இச்சங்க மரபையொட்டிச் சங்கம் மருவிய காலத்தில் திருமாலைக் குறிக்கும் காளவாயர் என்னும் பெயரும் தோன்றியது. காளவாயன் என்னும் பெயர் இன்றும் சிற்றூர்களில் வழங்குகிறது. இச்சொல்லின் வேரிலிருந்து தோன்றியது காளமேகப் புலவரின் பெயர். கரியமேகம் என்பதே இதன் பொருளாகும். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நண்பர் ஆண்டித்தேவர் பிறந்த ஊர் காளப்பன்பட்டியாகும். அம்+காள்+அம்மை = அங்காளம்மை என்பது ஒரு தெய்வத்தின்

பெயராகும். லகரம் ளகரமாகவும் அதன் வாயிலாய் ழகரமாகவும் திரிதல் இயல்பு. எடுத்துக்காட்டு:

கல்–கள்–காளம்–காழகம் = கருமை. கல் + து = கஃது

கஃறெனல் = கறுத்திருத்தல். இவ்வேரிலிருந்து தோன்றியவளே காளி. இங்கு ஓர் ஊராட்சித் தேர்தலில் ஊாகாளன் என்பவர் போட்டியிடுகிறார், மொழியின் பரிணாம வளர்ச்சியால் கறுப்பணசாமியாகவும், கருப்பாயி அம்மனாகவும் மாறினார்.

"கஃறென்னும் கல்லதரத்தம்" (தொல், எழுத்து 40, உரை) கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள்கள் எனத் தொல்காப்பியம் கூறுகிறது. எனவே நிறத்தைக்குறிக்க முன்னோர் காளம் என்னும் சொல்லைக் கையாண்டுள்ளனர். இது சங்ககாலப் பெயர் அல்லவெனினும் வந்தது கொண்டு வராதது முடித்தல் என்னும் உத்தியாற் கொள்க.

இனி இரு கள்வர்களைக் குறித்துக் காண்போம்.

ஒருவன் வேங்கடமலையை ஆண்ட புல்லி என்பவன். இவன் பெருங் கொடையாளி. இவனைக் கள்வர் கோமான் எனப் புகழ்ந்து பாடினார் மாமூலனார். இரண்டாமவன் மதுரையை ஆண்ட தென்னனாம் பாண்டியன். இவனைக் கள்வர் பெருமகன் எனச் சிறப்பித்துப்பாடினார் மதுரைக் கணக்காயனார், இருவரும் திருமால் மீது ஆழ்ந்த பற்றுக் கொண்டவராவர். வேங்கடத்தில் ஆண்டுதோறும் திருமாலுக்குப் பல விழாக்கள் கண்டவன் புல்லி. வேங்கடத்தில் வாழ்ந்த புல்லி சோழபாண்டியர் வலிகுன்றிய காலத்து திருச்சிக்கு அருகில் போரின் நிமித்தம் பாடிவீடு அமைத்திருந்தான். அது இன்று புல்லம்பாடி என வழங்குகிறது. அவன் வெட்டிய கால்வாய் புல்லம்பாடிக் கால்வாய் எனப்படும். புல்லி என்பது புலவர் வழக்கு. பொதுமக்கள் புல்லன் என்றே வழங்கினர். கருமாத்தூர் (கருமை+மால்+ஊர்) இவ்வூருக்குக் கிழக்கே உள்ள ஏரி புல்லன் ஏரி எனப்படும். இங்கிருந்து நான்கு கல் தொலைவில் நாகமலைத் தொடரின் சரிவில் ஒரு வெந்நீர் ஊற்று உள்ளது. இதைப் புல்லூத்து என்பர்.

கழல்புனை திருந்தடிக் கள்வர் பெருமகன்

மழுபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் பெறினும் (அகம் 61)

இவனைக் குறித்து அகம் 83, 209, 295, 311, 359 புறம் 385 ஆகிய மேலும் ஆறு பாடல்கள் உள்ளன.

"ஆ கொள் மூதூர்க் கள்வர் பெருமகன்
ஏவல் இளைஞர் தலைவன் மேவார்
அருங்குறும் பெறிந்த ஆற்றலொடு பருந்துபடப்
பல்செருக்கடந்த செல்லுறழ் தடக்கை
கெடாஅ நல்லிசைத் தென்னன்"

மதுரைக்கணக்காயனார் (அகம் 342)

**டாக்டர் எஸ்.கிருஷ்ணசாமி ஐயங்கார்:**

சங்க இலக்கியத்தின் பல கையெழுத்துப் பிரதிகளில் களவர் என்ற பாடம் காணப்படுகிறதேயன்றி டாக்டர் சாமிநாதையர் பதிப்பில் உள்ளது போல் கள்வர் என்ற பாடம் இல்லை. இக்களவர் களப்பிரர் எனப்படுவர். அவர்கள் தமிழ்நாட்டில் குடிபுகுந்ததே சங்ககாலப் பண்பாட்டின் வீழ்ச்சிக்குக் காரணம் எனக் கூறுவது மிகையாகாது.

**நாவலர் வேங்கடசாமி நாட்டார்:**

சைவசித்தாந்தப் பேராசிரியரான மெய்க்ண்டதேவர் என்பவர் களவர் குடியில் தோன்றியவேயாவர். பல்லவரும் தொண்டையரும் இக்குடியில் தோன்றினர்.

**டாக்டர் துரை அரங்கசாமி:**

பிற்காலத்தில் கள்ளரைச் சோழரென்றும், மறவரைப் பாண்டியரென்றும் கருதும் கருத்து ஏற்பட்டது.

**ஆசிரியர்**

களவர் என்பதும் கள்வர் என்பதும் பிழையான பாடங்களாகும். இம்மாதிரிப் பிழைகளுக்கு மேலும் இரு எடுத்துக்காட்டுகள் காட்டுதும். குறுந்தொகையில் பெருந்தேவனார் பாடலில்,

1. "குன்றின் நெஞ்சுபக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்"
   என்னும் அடியில் செஞ்சுடர் நெடுவேல் என்ற பாடமே சிறந்தது.
2. "அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை" என்ற

குறளில் கணங்குழல் என்றிருக்க வேண்டும். பரிமேலழகர் கொண்ட பாடமும் இதுவேயாகும். (பேராசிரியர் பாலசுந்தரம்) இவை ஏடெழுதுவோரால் நேர்ந்த பிழைகளேயாம்.

**தேவநேயப் பாவாணர்:**

கள்ளரும் மறவரும் முறையே சோழனுக்கும் பாண்டியனுக்கும் படைஞராயினர். பண்டைத் தமிழ்நாட்டின் வெற்றிச் சிறப்பிற்கு இவ்விரு குலமும் பெருங்காரணமென்பது தென்னாட்டுக் குலமரபில் விளக்கப்படும். கள்ளர் தனித் தமிழராயிருப்பவும், அவரைப் பல்லவரென்று ஓர் அயல் வகுப்பாராகக் கூறிவருகின்றனர் சிலர். அவருக்குத் தனிமொழியும் தனி மதமுமில்லை. தமிழ்நாட்டு மொழியும் மதமும் அவர்க்கிருந்தன. இனிப் பேரறிஞர் காசுப்பிள்ளை அவர்களோ கள்ளர் பண்டைய நாகர் மரபினர் என்பர்.

நிலந்தரு திருவினெடியோன் என்பதற்குத் திருமாலெனப் பொருள் கூறுவர் நச்சினார்க்கினியர். மதுரைக் கணக்காயனார் கூறும் கள்வர் பெருமகனும் அவன் வழிவந்தோரும் திருமாலிருஞ்சோலை மலையிலுள்ள இறைவன் மீது பெரும் பற்றுக் கொண்டிருந்தனர். அத்திருமால் இன்றும் கள்ளர் + அழகர் = கள்ளழகர் எனப் போற்றப்படுகிறார். போத்தென்னும் பெயர் இளமைக்கும் ஆண்பாற்கும் உரித்து (தொல்.மரபு. 24, 41) வீரனுக்குப் புலிப் போத்து உவமை. "உறுபுலிப் போத்தினோவியர் பெருமகன்" (சிறுபாண். 122) சாமிநாதையர் பதிப்பில் உறுபுலித் துப்பினோவியர் பெருமகன் என்ற பாடமே உள்ளது. சங்கப் புலவர்களில் போத்தனார் என்னும் பெயர் கொண்டோர் நால்வர் உள்ளனர். கள்ளரிடையே போத்தன் என்னும் பெயர் உள்ளோர் பலர் உள்ளனர். போத்தன்பட்டி என்னும் பெயரில் இரண்டு ஊர்கள் உள்ளன. பெரும்புலி என்னும் பெயருள்ள ஒருவர் அண்மையில் காலமானார். மதுரை மாவட்டத்தில் இம்மரபினர் மிகப் பெரும்பான்மையோர் ஆவர்.

இக்காலத் திரைப்படங்களும் தொலைக்காட்சியும் தமிழ்மரபுக்கு ஒவ்வாத பல பெயர்களை அறிமுகப்படுத்தி வருகின்றன. தொலைக்காட்சியில் ப்ரியா என்னும் தலைப்பில் நாடகம் நடத்துகின்றனர். இதனை ஆட்சியாளர் தட்டிக் கேட்க

வேண்டும். மறைமலையடிகளும், பரிதிமாற் கலைஞரும் இன்றிலர். தமிழர் இல்லந்தோறும் பழந்தமிழ்ப்பெயர்கள் ஒலிக்க வேண்டும். தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன். இவ்வளவு நீண்ட பெயரை யாருக்கிடுவது என மலைக்க வேண்டா. செம்பியன் என்றழைத்தலே சாலும்.

எந்தமிழ்க் கிருத்தவரும் முகமதியரும் தம்பெயரையும் மறைகளையும் ஏற்றபெற்றி இயன்றவரை எளிய இனிய தமிழைப் பயன்படுத்தி அன்னைத் தமிழுக்கு அழகு சேர்க்குமாறு அவர்தம் இறைவர் பெயரால் வேண்டுகிறேன்.

**தேனூர்**

1. வேனி வாயினுந் தண்புன வொழுகுந்
   **தேனூர ன்ன**விவள் தெரிவளை நெகிழ"
2. "தேர்வண் கோமான் **றேனூ ரன்ன**விவள்
   நல்லணி நயந்துநீ துறத்தலின்"
3. ஆம்பலஞ் செறுவிற் **றேனூ ரன்ன**
   இவணலம் புலம்பப் பிரிய"

என்ற ஐங்குறுநூற்று அடிகள் நோக்கத்தகும்.

இத்தேனூரைத் தாலமி தைனூர் எனக் குறிப்பிட்டுள்ளார். இது தேர்வண்கோமான் என்ற தலைவனின் தலைமையிடமாகும். இவ்வூர் இன்று வையைக் கரையில் திருவேடகத்திற்குக் கிழக்கே உள்ளது. மேற்கண்ட பாடல்களும் மருதத்திணைப் பாடல்களேயாகும். தேனூர் பழைய இராமநாதபுரம் மாவட்டத்தில் திருச்சுழி வட்டத்தில் உள்ளதாகக் கனகசபை பிள்ளை கூறுகிறார். அவ்வட்டம் பாலைப்பகுதி போன்றதாகும். பின் எங்ஙனம் பாடலிற் கண்டவாறு வேனிலாயினுந் தண்புனல் ஒழுகும்? இத்தேனூரார் அழகர்கோவில் சாலையில் பெரிய மண்டபம் கட்டியுள்ளனர். சித்திரை முழுநிலவில் அழகர் ஆங்கு எழுந்தருளிக் காட்சி தருகிறார். தேனூர் மண்டபத்தைத் தெரியாதார் யாருமிலர்.

**நாலைகிழவன் நாகன்**

"தோலா நல்லிசை **நாலைகிழவன்**
பருந்து பசிதீர்க்கு நற்போர்த்

திருந்துவேல்நாகற் கூறினர் பலரே". (புறம் 179)

இந்த உலகத்தில் கொடைத்தன்மையுடையவர் இறந்துபோக, அதனால் பிறரிடம் சென்று ஏற்காமல் கவிந்துபோன என் உண்கலத்தை, உண்ணும் உணவை இட்டு மலர்த்தவல்லவர் யார் என்று கேட்டோம். அப்போது பகைவரின் வலித்துக் கட்டப்பட்ட முரசத்துடன் நாடு பலவற்றை வென்று கொண்ட திருமகள் விரும்பும் நுட்பமான அணி பலவற்றையும் உடைய பாண்டியனின் மறவன், பாண்டியனுக்குப் படை வேண்டும்போது உதவியும், அரசியல் கருமச் சூழ்ச்சி வேண்டும்போது அமைச்சியலுடன் நின்று அறிவு உதவியும் வருபவன், இவ்வாறு பலவிதமாக உதவி, தான் பூண்ட நுகம் ஒரு பக்கத்தில் சாய்ந்து தாழ்ந்து தளராமல் . செலுத்தும் பகட்டைப் போல வீரத்திலும் சூழ்ச்சியிலும் தளராமல், வீரம், ஊக்கம், தோல்வி காணாத நல்ல புகழையுடைய நாலை கிழவனும், பருந்தின் பசி தீர்க்கும் நல்ல போரைச் செய்யும் திருந்திய வேலைக்கொண்ட நாகனுமான வள்ளல் உள்ளான் என்று பலரும் கூறினர். அதனால் யாம் உன்னிடம் வந்தோம் என்பது இப்பாடற்செய்தி.

"நாகர்கள் தமிழராகவே தமிழகத்தில் வாழ்ந்தனர். எங்கும் வேறு இனமொழிக்குரியரென்ற பேச்சும் ஏற்படவில்லை. தனி இனமாகவே வாழ்ந்தனர். ஆகவே, அவர்கள் கடல் கொண்ட தமிழகத்திலோ, தமிழகம் சூழ்ந்த நிலத்திலோ இருந்த தமிழினப் பிரிவினர் என்றும், கடல்கோளின் பயனாகவோ வேறு காரணங்களாலோ எங்கும் பரந்தவர் என்றும் கருத இடமுண்டு. இஃது இன்னும் ஆராயத்தக்கது" என்கிறார் கா.அப்பாத்துரையார்.

உ.வே.சாமிநாதையர் நாலை என்ற சொல்லுக்கு நாலூர் என்று பொருள் எழுதியுள்ளார். நான்கு என்ற எண் நாலாகி ஐகார விகுதி பெற்றுள்ளது. நால்+ஐ=நாலை. நான்கு ஊர் என்பது நாலூராகி செய்யுளில் சுருக்கம் கருதி நாலை என்றாயிற்று.

இனி, இந்த நான்கு ஊரைத்தேடி மாவட்டம் முழுதும் தேடி அலைந்தபோது நல்லோர் நவின்றவை, 1. நாளாந்தூர் 2. சொக்கத் தேவன்பட்டி 3. ஆரியர்பட்டி 4. கன்னியம்பட்டி ஆகியனவாகும்.

இவ்வூர்களில் ஆரியர்களுக்கிருந்த தொடர்பு அறியக்கூடவில்லை. பாண்டி நாட்டில் கன்னியாறு பாய்ந்ததால் அது கன்னிநாடு என வழங்கியதாம். (திருவிளை. தடாதகைப்.61) சொக்கன் என்ற பெயரும் இதை உறுதிப்படுத்துகிறது. பண்டைய நாளில் இந்நான்கு ஊர்களில் வாழ்ந்தவர்கள் இன்று நாற்பது ஊர்களில் பரவி வாழ்கின்றனர். அனைவரும் தங்களை நாலூரார் எனக் கூறுகின்றனர். இன்று நாலூர் என்பது ஊர்ப்பெயராக இல்லை; குலப் பெயராக மாறியுள்ளது. மேற்சொன்ன நாற்பது ஊர்களையொட்டி நாகமலைக் குன்றுகள் நீண்டு கிடக்கின்றன. ஒரு குன்றுக்கு வடபால் உள்ள ஓர் ஊரின் பெயர் நாக + அண்ணம்பட்டி= நாகணம்பட்டி. அண்ணம் என்ற சொல் தலைமைப் பண்பைக் குறிக்கும். இவ்வூரில் கிழவன் நாகன் வாழ்ந்திருக்க வேண்டும் அல்லது அவன் பெயரால் அவன் வழிவந்தோர் அப்பெயரைச் சூட்டியிருக்க வேண்டும். இரண்டில் ஒன்று உறுதியாகத் தெரிகிறது. அது எதுவென அறியக் கூடவில்லை. இங்கு நாகன் என்ற பெயரில் பலர் உள்ளனர்.

கிழவன் நாகன் பெருங்கொடையாளியாய் விளங்கினான். நாகக் குன்றுகளின் தென்பால் ஒரு பெரிய ஏரியை வெட்டியுள்ளான். இன்றும் பயிர்த்தொழிலுக்கு அது உறுதுணையாக உள்ளது. மாவட்ட வரை படத்தில் இவ்வேரி 100 ஏக்கராகக் காட்டப்படுகிறது. இன்று பலர் ஏரியின் நிலத்தைக் கையகப்படுத்தியுள்ளனர். இந்த ஏரியின் பெயர் கிழவன்+ஏரி=கிழவனேரி என்பதாகும். அம்மட்டோ அதுவன்றியும் இங்கிருந்து தெற்கே 15 கல் தொலைவில் சங்கரன்கோவில் செல்லும் சாலையிலும் ஒரு கிழவனேரி இருக்கிறது. இரு ஏரிகளுக்கும் அருகே உள்ள இரு ஊர்களும் கிழவனேரி என்றே வழங்குகின்றன.

பழந்தமிழ்ப் பெயர்களைக் கொண்டு சங்க கால வரலாற்றை அறியும் ஓர் அரிய முயற்சியில் இஃது ஒரு துளியேயாம். இம்முயற்சி ஏனைய மாவட்டங்களிலும் தொடர வேண்டும். சங்க நூல்கள் இலக்கியங்கள் மட்டுமல்ல; அவை தமிழகத்தின் வரலாற்றுப் பெட்டகமாகும் என்பதை மெய்ப்பிக்க நல்லறிஞர் முயல்வாராக.

# பட்டினப்பாலை காட்டும் சமுதாய வாழ்வியல்

-ஆய்வாளர் மு.தமிழ்க்கொடி

**தோற்றுவாய்**

இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி. கடியலூர் உருத்திரங்கண்ணனார் அக்காலச் சமுதாய வாழ்வைப் பெருமளவில் பிரதிபலிக்கும் வண்ணம் இந்நூலை அமைத்துள்ளார். இந்நூலில் காவிரிப் பூம்பட்டினத்தின் சிறப்பு விரிவாக விளக்கப் பெற்றுள்ளது.

'பட்டினப்பாலை காட்டும் சமுதாய வாழ்வியல்' என்ற இக்கட்டுரையில் கடற்காவிரி, நகர அமைப்பு, மக்களின் வாழ்க்கை, அரசியல், சமயநிலை, போர்த்திறம், வணிகச் சிறப்பு, பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், கலைகள் ஆகிய செய்திகள் பற்றி விளக்கப்படுகின்றன.

**கடற்காவிரி**

"சோழநாடு சோறுடைத்து"

என்ற சிறப்பினைக் காவிரியாற்றினால் பெற்றது சோழநாடு. காவிரியால் சோழநாட்டில் செல்வம் கொழித்தது. மழை அற்ற காலத்திலும் காவிரியின் நீர் வற்றாது. ஆதலால் கரும்பும் நெல்லும் கழனிகளில் வளர்ந்தன. அது மேற்கு மலையில் தோன்றிக் கிழக்கே கடலொடு கலந்தது. இக்காவிரியின் பெருமையை,

"வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி
புனல்பரந்து பொன்கொழிக்கும்"

எனப் பட்டினப்பாலை பாராட்டுகிறது.

சோழநாட்டில் கரும்புச் சாற்றைக் காய்ச்சும் கொட்டில்கள்

பல இடம் பெற்றிருந்தன. அக்கொட்டில்களினின்றும் எழும் தீப்புகை பக்கத்து வயல்களில் மலர்ந்திருந்த நெய்தல் மலர்களை வனப்பிழந்து வாடச் செய்தது. இச்செய்தியை,

"விளைவறா வியன்கழனிக்
கார்க்கரும்பின் கமழாலைத்
தீத்தெறுவிற் கவின்வாடி
நீர்ச்செறுவி னீணெய்தல்
பூச்சாம்பும் புலத்தாங்கண்"

என்று ஆசிரியர் பாடியுள்ளார்.

**நகர அமைப்பு:**

காவிரிப் பூம்பட்டினத்தின் அகநகர் பட்டினப்பாக்கம் எனவும், புறநகர் மருவூர்ப்பாக்கம் எனவும் பெயர் பெற்றன. நிலாமுற்றத்தில் 'வளி நுழையும் வாய்' வைத்து மாளிகையாகச் செய்துள்ளனர். கடலின் இறால் தின்று வறளடும்பின் மலர் மலைந்தவர் கடல் மருங்கில் நெய்தல் நிலத்தில் வாழ்ந்தனர். அம்மக்கள் மருவூர்ப் பாக்கத்தினராவர். முத்து, மணி, பொன் இவற்றைக் குவித்திருக்கும் வணிக வீதிகள் இருந்தன. கள், மீன் ஆகிய வணிகப் பொருளையுடைய வணிகர் தெருக்கள் பல்வேறு நாட்டு வணிக மக்கள் கூடி வாழும் இடங்கள் முதலியன குற்றமறச் செவ்வனே அமைந்து விளங்கின.

மருதநிலத்தில் வாழ்ந்த மக்கள் வயலாமை புழுக்குண்டு புனலாம்பற் பூச்சூடினார்கள். காவிரிக் கரையின் மருங்கில் பயிர்த்தொழில் செய்யும் உழவர்கள் அகநகராகிய பட்டினப்பாக்கத்தில் வாழ்ந்தனர். இசைவல்லுநர் மறையோர் முதலியோர் வாழ்ந்த இடங்களும் இந்நகரில் சிறப்புற அமைந்திருந்தன.

ஏனைய நகரங்கள் போன்று படைகளாலும், அரண்களாலும் காக்கப்படுதலோடு அமையாது இப்புகார் நகரைப் பூதங்களும்

காவல் செய்தன என்னும் இச்சிறப்பைப்

"பூதங்காக்கும் புகலருங் கடிநகர்" (பட்டின : 57)

என்கிறார் ஆசிரியர். பூதங்கள் காவற்றொழிலை மேற்கொண்டிருந்த செய்தியை,

"கோநகர் காத்த... மாபெரும் பூதம்"

(சிலம்பு, கடலாடு 9-11)

என்று இளங்கோவடிகளும் பாடியுள்ளார்.

**மக்களின் வாழ்க்கை**

நகரில் வாழ்ந்த மக்கள் செல்வச் செழிப்புடன் நிறைவாழ்வு வாழ்ந்தனர். முற்றத்தில் உலர வைத்த நெல்லைத் தின்னவரும் கோழியை மகளிர் மகரக் குழையால் எறிந்தனர்.

மெய்நூல்களால் தலைசிறந்தது என்று ஓதப்பெற்ற உண்டி கொடுக்கும் அறத்தையே காவிரிப்பூம்பட்டினத்தாரும் செய்தனர். அங்கு வாழ்ந்த மக்கள் அறநெறியாளர்களாகத் திகழ்ந்தார்கள்.

பரதவர் இறால் மீனையும் ஆமை இறைச்சியையும் உண்டனர். அடப்பம் பூவையும், ஆம்பல் மலரையும் சூடி மகிழ்ந்தனர். அகன்ற மன்றத்தில் பலரும் ஒருங்கு திரண்டு ஒருவரொடு ஒருவர் போரிட்டுக் கொண்டனர். இதனை,

"மருவூர் மருங்கின் மறங்கொள் வீரரும்

பட்டின மருங்கிற் படைகெழு மாக்களும்

கல்லுமிழ் கவணினர் கழிப்பிணிக் கலைந்தோர்

பல்வேற் பரப்பினர் மெய்யுறத்தீண்டி"

என்னும் சிலப்பதிகாரப் பகுதியாலும் அறியலாம்.

வேளாளர்கள், எளியவர்களுக்குப் பொருளுதவி செய்து களவு முதலிய தீத்தொழில்களை அவர்கள் செய்யாதவாறு

நல்வழிப்படுத்தினர். தேவர்களுக்காக அந்தணர்களைக் கொண்டு வேள்விகளைச் செய்வித்தனர். பசுக்களைப் பாதுகாத்துப் பெருக்கினர். விருந்து போற்றி வாழ்ந்தனர்.

**அரசியல்:**

பட்டினப்பாலை காட்டும் மன்னன் திருமாவளவன் (கரிகாலன்) செங்கோலாட்சி செய்தான். கோழி எறிந்த கொடுங்காற் கனங்குழை பொற்காற் புதல்வருடைய சிறுதேரை விலக்கும் விலங்கு பகை அல்லது கலங்குபகை அறியாத ஆட்சி நடத்தினான். திருமாவளவன் தன் நாட்டில் உள்ள காடுகளை அழித்து நாடாகச் செய்தான். குளங்களை வெட்டி நீர்வளம் உண்டாக்கினான். நாட்டில் பல்வேறு வளங்களையும் பெருகச் செய்தான். பெரிய நிலைகளையுடைய மாடங்கள் அமைந்த உறையூரை விரிவடையச் செய்து, அங்குத் திருக்கோயில்களையும். குடிகளையும் நிலைபெறச் செய்தான். உறையூரைப் பகைவரிடம் இருந்து காக்கும் வண்ணம் மதில்களை அமைத்தான். இதனால் அங்கு வாழ்ந்த மக்கள் பசியும், பிணியும், பகையுமின்றி நலவாழ்வு வாழ்ந்தனர்.

**சமயநிலை:**

காவிரிப் பூம்பட்டினத்தில் சோமகுண்டம், சூரியகுண்டம் ஆகிய இரு குளங்கள் இருந்தன. அவற்றில் மூழ்கிக் காமனை வணங்கிய பெண்கள் தங்கள் கணவருடன் இம்மையிலும் மறுமையிலும் இன்புற்று வாழ்ந்தனர் என்பதை "இருகாமத்து இணையேரி" என்னும் குறிப்பால் உணரலாம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் அவிர்சடை முனிவர் வாழ்ந்த தவப்பள்ளிகளும், அமணர் பள்ளிகளும், பௌத்தப் பள்ளிகளும் இருந்தன. இப்பள்ளிகள் இருந்ததை நோக்கின் பண்டைநாளில் இந்நகரில் பல்வேறு சமயத்தினரும் சமயப் பொறையுடன் வாழ்ந்தனர் என்பது புலனாகின்றது.

**போர்த்திறம்:**

பகைவருடைய காவல் அமைந்த அரண்களை அழித்துக் கதவுகளைக் குத்தி முறிக்கும் கொம்பினையும் பகைவருடைய முடியுடைக் கருந்தலைகளை உதைத்து உருட்டும் முன்கால் அடியையும் உடைய உயர்ந்த அழகிய யானைகளோடும், வடித்த மணி கட்டிய குதிரைகளோடும் உழிஞைப் பூவைச் சூடிப் போரிட்டான் கரிகாலன். அப்போது பாசறையில் பேய்க்கண்ணை ஒத்த காவல் முரசம் முழங்கியது.

பகைவரின் மருதநிலம் நீர்வற்றி முல்லைக் கருப்பொருளான *மான்கள் உலாவும் காடாயின என்பதால்* நாடு *காடான நிலையும்,* பகைவர் நாட்டில் நகர அழிவு, மன்ற அழிவு, அம்பல அழிவு, மருத அழிவு இவைகளினால் சோழனின் வீரமும் நமக்குப் புலனாகின்றன.

"இவன் இப்பகைவர்களின் மலைகளை எல்லாம் அகழ்தலைச் செய்வான்; கடலைத் தூர்ப்பான்; வானத்தை வீழ்த்துவான்; காற்றினை இயங்காதபடி மாற்றுவான்'' என்று வியந்து கூறும்படியாக, கருதியதனைக் கருதியவாறே செய்து முடிக்கும் வன்மையுடையனாய் ஆசிரியரால் போற்றப்படுகிறான்.

**வணிகச் சிறப்பு:**

காவிரிப்பூம்பட்டினம் வணிகச் சிறப்புடைய நகர். இந்நகரம் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகத்தில் மேலோங்கித் திகழ்ந்தது.

"வெள்ளையுப்பின் கொள்ளை சாற்றி

நெல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி"

என்றதால், பண்டைத் தமிழரின் வணிகம் பெரும்பாலும் பண்டமாற்றாகவே இருந்தது என்பது புலனாகின்றது.

"புலிபொறித்துப் புறம்போக்கி" (பட்டின : 135)

என்றதால், அன்று கடற்றுறை வழி வந்து செல்லும் பண்டங்களை

அளந்தறிந்து முத்திரையிடும் மரபு இருந்தது என்பதனை அறியலாம்.

"நீரின் வந்த நிமிர்பரிப் புரவியுங்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னுங்
குடமலைப் பிறந்த வாரமு மகிலுங்
தென்கடன் முத்துங் குணகடற் றுகிருங்
கங்கை வாரியுங் காவிரிப் பயனு
மீழத் துணவுங் காழகத் தாக்கமு
மரியவும் பெரியவு நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு"

என்னும் பட்டினப்பாலை அடிகள் மனங்கொள்ளத்தகும்.

கடல்வழியாகக் குதிரைகளும், நிலத்தின் வழியாக மிளகு மூட்டைகளும் வரப்பெற்றன. இமயமலையில் தோன்றிய மாணிக்க மணி வகைகளும், பொன் வகைகளும், மேற்குத் தொடர்ச்சி மலையில் விளைந்த சந்தன, அகிற் கட்டைகளும், தெற்குக் கடலில் விளைந்த முத்துக்களும், கிழக்குக் கடலில் தோன்றிய பவழங்களும், கங்கை, காவிரி ஆகிய ஆற்றில் விளைந்த செல்வங்களும், ஈழத்தில் இருந்து வந்த உணவுப் பொருள்களும், காழகத்திலிருந்து வந்த பொருள்களும் இன்னும் பல பண்டங்கள் குவிந்து கிடந்தன.

"தம்முடைய பொருளையும், பிறர் பொருளையும் ஒரு தன்மையதாகவே கருதி அவற்றைத் தாம் பெறும்போது, தாம் பிறரிடமிருந்து கொள்ளும் பொருளுக்குக் குறைவாகக் கொடுக்காமலும் தமக்குரிய ஊதியத்தை வெளிப்படையாகச் சொல்லி யும் விற்பர். சமுதாய நலன் கருதிச் சுரண்டல் இல்லாத நிலையில் வணிகம் அன்று போற்றப்பட்டுள்ளமை புலனாகின்றது.

**பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்:**

வெள்ளிமீன் திசை திரிந்து தெற்கின்கண் சென்றால் உலகில் மழைபொய்த்து வறகடம் உண்டாகும் என்பது பண்டைத் தமிழ்மக்களின் நம்பிக்கை ஆகும்.

போரில் மாண்ட மறவர்களுக்குக் கல்நட்டுப் பலியிடும்போது கல்லைச் சூழ வேல் நடும் வழக்கம் உண்டு என்பது 'நடுகல்லின் அரண் போல' என்னும் உவமையால் புலப்படுகின்றது.

வருணனைச் சுறவுக் கோடு நட்டுப் பரவும் மரபை,

"சுறவ முள்மருப்பணங் கயர்வன கழிச்சூழல்"

என்னும் பெரிய புராண அடியாலும் அறியலாம்.

பட்டினத்தில் சில விளக்குகளே இரவு முழுவதும் எரிவன. எஞ்சிய பலவும் படிப்படியாய் அவிந்துப்போம். 'சுடர் எண்ணுதல்' என்ற குறிப்பினால் இரவிற் பொழுது அறிந்தனர் பரதவர் என்பது புலனாகின்றது.

"மணற்குவைஇ மலர்சிதறி வணங்கும் புதவம்"

என்றதால் கள் இருக்கும் இடத்தில் பேய்கள் அணுகாதபடி தெய்வம் பேணுதல் மரபாகும்.

"அமரர் காப்பின் வந்த நிமிர்பரிப் புரவி"

என்பதால் பெருங்கடலில் இயங்கும் மரக்கலங்கள் தீங்கின்றிக் கரை சேர்ந்தால் அதனைத் தெய்வம் காத்தது என்று நம்புவது பண்டையோர் கொள்கையாக இருந்துள்ளது.

**கலைகள்:**

அகன்அட்டில் சோறுவாக்கிய கொழுங்கஞ்சி, ஆறுபோலப் பரந்தொழுகியது. அதில் ஏறுகள் தம்முள் போரிட வினை ஓவத்து வெண்கோயில் மாசடைந்தது. 'வினை ஓவத்து வெண்கோயில்' என்ற குறிப்பு அரண்மனைகளில் ஓவியம் தீட்டப்பட்டிருந்ததை

அறிவிக்கிறது.

பல்கேள்வித் துறை போகிய தொல்லாணை நல்லாசிரியர் உறழ்தல் குறித்து எடுத்த உருகெழு கொடி கல்வியின் மேன்மையை உணர்த்துகிறது.

"ஏழகத் தகரோ டுகளு முன்றிற்

குறுந்தொடை நெடும்படிக்காற

கொடுந்திண்ணைப் பஃறகைப்பிற்

புழை வாயிற் போகிடகழி

மழைதோயு முயர் மாடத்து"

என்ற பாடல் அடிகளினால் நேர்த்தியாகக் கட்டப்பட்ட மாட மாளிகைகள் இருந்ததை அறிகிறோம்.

"பாட லோர்த்து நாடக நயந்தும்"

என்ற வரி புகார் மக்கள் பாடலிலும், நாடகத்திலும் மேன்மையுற்று விளங்கினர் என்பதை உணர்த்துகிறது. இலக்கியம் என்பது, அது தோன்றிய காலத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையினைப் புலப்படுத்தும் தன்மையது. இவ்விளக்கத்திற்குப் பட்டினப்பாலை எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

# உன்னத உடல் நலம் தரும்
# உயர்வான வாழ்வு தரும்

## உடல் நலப் பரிசோதனைத் திட்டங்கள்

- எக்ஸிகியூட்டிவ் முழு உடல் நலப் பரிசோதனை
- முழு உடல் நலப் பரிசோதனை
- முதியவர்களுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- குழந்தைகளுக்கான முழு உடல் நலப் பரிசோதனை
- திருமணத்திற்கு முன் பரிசோதனை
- முழு இருதய பரிசோதனை
- முழு நீரிழிவுப் பரிசோதனை
- புற்றுநோய்ப் பரிசோதனை
- மதுப்பழக்கமுள்ள நோயாளிகளுக்கான முழுப் பரிசோதனை
- ஆண்களுக்கான பாலியல் குறைபாடுகள் குறித்த சோதனை
- வெளிநாடு செல்லும் பயணிகளுக்கான பரிசோதனை
- பொது உடல் நலப் பரிசோதனை
- வேலைக்குத் தகுதி பெற மருத்துவப் பரிசோதனை

காலை 8.00 மணி முதல் 9.00 மணிக்குள்
நீங்கள் விரும்பிய நாளில் (ஞாயிறு உட்பட)
வெறும் வயிற்றில் மல சாம்பிளோடு நேரில் வரவும்.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் மருத்துவமனைக் கட்டணத்தில் 20 சதவீதம் சலுகை வழங்கப்படும்

உங்கள் நோய் பற்றிய பிரச்சனைகளுக்குத் தொலைபேசியின் மூலம் இலவச ஆலோசனை வழங்கப்படும். திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 4.30 மணி முதல் 5.30 மணி வரை

## மாஸ்டர் ஹெல்த் செக்-அப் டிபார்ட்மெண்ட்

# மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை-625 107. போன் : 588741-56
Fax : 586353, E-mail:mmhrc@md2.vsnl.net.in

சங்கர் பிரிண்டிங் பிரஸ், மதுரை-1 ✆ 740064